| | | | |
|---|---|---|---|
| | இருந்த 12 பாடநெறிகளிற்குரிய பாதீட்டு வருமானம் ரூபா 29,245,000 தொடர்பாக அந் நியதிகளுக்கு மாற்றமாக பாதீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. | உட்படுத்தி சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | |
| ii 4.5 பந்தி | 2018 சனவரி 01 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலத்தினுள் முடிவுறுத்திய பாதீட்டு வருமானம் ரூபா 209,370,600 ஆன 55 சுய நிதி ஈற்றல் செயற்பாடுகளிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்தியுள்ள செயற்பாடுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் தற்போது தயாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii 5.2.1 பந்தி | மொத்த நேரில் கிரயத்தின் 15 சதவீதம் முதல் 30 சதவீத அளவு நிறுவகத்தின் அபிவிருத்தி செலவு விடயங்களிற்காக ஒதுக்க வேண்டிய போதும், 2018 சனவரி 01 திகதி முதல் 2022 ஜுலை 31 திகதி வரையான காலத்தினுள் செயற்படுத்திய 21 சுய நிதி ஈற்றல் செயற்பாடுகளிற்குரிய பாதீட்டு வருமானம் ரூபா 58,840,600 இலிருந்து நிறுவனத்தின் அபிவிருத்தி செலவு விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவன மீண்டுவரும் செலவிற்காக எவ்வித திறைசேரி ஏற்பாடும் கிடைக்காததால் அனைத்து மேந்தலை செலவுகளையும் சுய நிதி செயற்பாடுகளிற்கு உரியதாக தயாரிக்கப்படும் பாதீட்டினூடாக மேவிக் கொள்ள நேரிடுவதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 241,374,252 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 48,462,794 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 192,911,458 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பற்கு வட்டி வருமானம் ரூபா 49,044,377 இனால் அதிகரித்தமை, அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் ரூபா 163,531,566 இனால் மற்றும் ஊழியர் ஊதிய செலவினம் ரூபா 8,022,635 இனால் குறைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலத்திற்குரிதாக 1891 மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 30,259,400 ஆன நிலுவை பாடநெறி கட்டணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட இயலாதிருந்தது. | நிலுவை பாடநெறி கட்டணத்தை செலுத்துமாறு அனைத்து மாணவர்களுக்கும் நினைவூட்டல் அனுப்பியுள்ளதுடன் இந்த நிலுவை பாடநெறி கட்டணத்தை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை பாடநெறி கட்டணத்தைத் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆராய்ச்சி கால எல்லை முடிவடைந்த ரூபா 12,580,485 ஆன 06 ஆராய்ச்சி மானீயங்களிற்குரிய ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய அல்லது அதன் காலத்தை நீடிக்க மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் குறித்த ஆராய்ச்சிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. | பல காரணங்களின் மீது 06 ஆராய்ச்சி மானியங்களின் நடவடிக்கைகளை நிறைவு செய்ய அல்லது காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என. | சரியான கால எல்லையினுள் ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும். |
| (இ) | 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தினுள் செயற்படுத்தி இருந்த ரூபா 75,457,930 ஆன 19 ஆராய்ச்சி மானியங்களிற்கு உரியதாக ஆராய்ச்சி பத்திரங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஆராய்ச்சி மானியம் பெறுனர்களினால் ஆராய்ச்சி பத்திரங்கள் முன்வைத்தல் தற்போது மேற்கொள்ளப்படுவதாக. | சரியான கால எல்லையினுள் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முடிவுறுத்த வேண்டும். |
| (ஈ) | 06 ஆராய்ச்சி மானியங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 1,430,243 தொகையை செயற்படுத்தாததால் மற்றும் 04 ஆராய்ச்சி நிதியங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 2,038,815 தொகை குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் குறைபயன்பாட்டுடன் நிலவின. | எதிர்காலத்தில் இந்த 06 ஆராய்ச்சி மானியங்களிற்குரிய நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த எதிர்பார்ப்பதாக மற்றும் பல காரணங்களால் 04 ஆராய்ச்சி மானியங்களிற்குரிய உடன்படிக்கைகளை செய்து கொள்ள இயலாது போனதாக. | நிதியத்தை கிடைத்துள்ள பணிகளிற்காக வினைத்திறனாக பயன்படுத்த மற்றும் ஆராய்ச்சி மானியங்களிற்கு உரியதான உடன்படிக்கைகளிற்கு விரைவில் கைச்சாத்திட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலைகள் நிறைவு செய்யப்பட்ட 06 ஆராய்ச்சி மானியங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,087,783 ஆன நிலையான சொத்துக்களை மீளாய்வாண்டு இறுதி வரையும் நிறுவகத்திற்கு சுவீகரிக்க அல்லது குறித்த கருத்திட்டத்திற்கு ஒப்படைக்க ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஆராய்ச்சி மானியங்களினால் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களை விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு நிலையாக சுவீகரிக்க குறித்த ஆராய்ச்சியாளர்கள் தற்போது அறிவூட்டப்பட்டுள்தாக. | நிலையான சொத்துக்கள் சுவீகரிக்க அல்லது ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |